செய்தி வெளியீடு எண்:59 நாள்:28.01.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (28.1.2021) சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த அரசுடைமையாக்கப்பட்ட ‘‘வேதா நிலையம்’’ நினைவு இல்லத்தினை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1948–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ஆம் நாள் பிறந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் தென்னிந்திய திரைப்பட உலகில் கலைச்செல்வி என்று புகழப் பெற்றார். மாநிலங்களவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் என மக்கள் பணியினை தொடர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர் ஆவார். 1991–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றார். அதன் பின்னர், 2001–2006, 2011–2016 மற்றும் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிபெற்று 15 1/2 ஆண்டுகாலம் தமிழ்நாடு முதலமைச்சராக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி சிறப்பான ஆட்சியினை தந்து மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிறப்புகளையும், நாட்டிற்கு அவர் செய்த சாதனைகளையும், தியாகங்களையும் பொதுமக்கள் அறியும் வண்ணம் அன்னார் வாழ்ந்த ‘‘வேதா நிலையம்’’ இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு நினைவிடமாக மாற்றப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 17.8.2017 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த ''வேதா நிலையம்'' இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு, அவர்கள் பயன்படுத்திய பொருட்களை பேணிக்காக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசால் அரசுடைமையாக்கப்பட்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த ''வேதா நிலையம்'' நினைவு இல்லத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் இன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்த ''வேதா நிலையம்'' இல்லம் 10 கிரவுண்ட் 322 சதுர அடி பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது. முன்பகுதியில் எழில்மிகு தோட்டத்துடன் கூடிய ''வேதா நிலையம்'' இல்லத்தினை அன்னார் வாழ்ந்த காலத்தில் இருந்ததைப் போல பழமை மாறாமல் தமிழ்நாடு அரசால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ''வேதா நிலையம்'' இல்லத்தில் அன்னார் அவர்கள் வாழ்ந்த அறை, நூலகம், அலுவலக அறை, விருந்தினர் காத்திருப்பு அறை, விருந்தினர் சந்திப்பு அறை, கூட்ட அரங்கு ஆகிய இல்லத்தின் அனைத்து இடங்களிலும் பூச்சு வேலைப்பாடுகள், தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு.ப. தனபால், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற

உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**